## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2017–2018 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்புகள்– 2017–2018 ஆம் நிதியாண்டு பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு உயர் தொழில்நுட்ப ஊன்றுகோல்கள் (Smart Cane) வழங்கும் திட்டம்– நிருவாக அனுமதி வழங்குதல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.23

நாள்: 08–06–2017
ஹேவிளம்பி, வைகாசி 25,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.37, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 30–11–2016.
2. மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்களின் 2017–2018 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை நாள் 16.03.2017.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ந.க.எண்.1428/உ.உ.–பிரிவு/2016, நாள் 03.04.2017.

--------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் (Smart Cane) நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள் 5,000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்க நடைமுறையில் உள்ள கொள்முதல் விதிகளைப் பின்பற்றி வாங்கி வழங்க ஏதுவாக நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 16.03.2017 அன்று 2017–2018 ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஏனைய அறிவிப்புகளுள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

“2017–2018 ஆம் ஆண்டில் 3.16 கோடி ரூபாய் செலவில், பார்வைத்திறன் குறைபாடு உள்ள 10,000 நபர்களுக்கு உயர் தொழில்நுட்ப ஊன்றுகோல்கள் (Smart Cane) வழங்கப்படும்.”

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், 2016–17 ஆம் நிதியாண்டு 5000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு உயர்தொழில்நுட்ப ஊன்றுகோல்கள் (Smart Cane) வழங்கிட ஊன்றுகோல்கள் ஒன்றின் விலை

ரூ.3,296/− என விலை நிர்ணயம் செய்யப்பட்டது எனக் குறிப்பிட்டு 2017−2018 ஆம் நிதியாண்டு பார்வையற்ற 10,000 மாற்றுத் திறனாளிகளுக்கு உயர்தொழில்நுட்ப ஊன்றுகோல்கள் (Smart Cane) வழங்குவதற்காக ரூ.3,62,60,000/− நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2017−18 ஆம் நிதியாண்டில் பார்வையற்ற 10,000 மாற்றுத் திறனாளிகளுக்கு உயர்தொழில்நுட்ப ஊன்றுகோல் (Smart Cane) வாங்கி வழங்கிட நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000−ன்படி கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விலை நிர்ணயிக்கப்பட்ட பின்னர் செலவின ஒப்பளிப்பு தனியாக வழங்கப்படும்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.30209/நிதி(சந)/2017, நாள் 07.06.2017 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை−5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை−35.
முதன்மை மாநில கணக்காயர்,சென்னை−18.

**<u>நகல்:−</u>**
நிதி (சந) துறை, சென்னை−9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை−9.
மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை−9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சென்னை−9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.